பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 265 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 25 சனிக்கிழமை (10.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து
### 203 மில்லியன் இலங்கை கடன்

(கொழும்பு)
203 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பொது மூலதன வளத்தி 11

## காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிராகவும் காலிமுகத்திடல் பகுதியில் போராட்டக்காரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் 11

## அமெரிக்கா பயணமானார்
### பஸில் ராஜபக்ஷ

(கொழும்பு)
முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று காலை அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியுள்ள நிலையில் தொடர் பதவி துறப்புக்களை 11

### அமைதியான போராட்டங்களை
# ரணில் அரசு ஒடுக்குகின்றது
### சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)
இலங்கையின் நெருக்கடியான காலப்பகுதியில் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் ரணில் அரசு அமைதியான போராட்டங்களை ஒடுக்குவதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களை மிக மோசமாக சித்தரிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( 12ஆம் பக்கம் பார்க்க)

AMNESTY INTERNATIONAL

## கந்தர்மடத்தில் விபத்து இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடம் பகுதிக்கு அருகே இடம்பெற்ற விபத்தில் மோட்டார் வண்டியில் பயணித்த இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

கிருஷ்ணகுமார் சரவணபவன் ( 32 வயது ) பட்டதாரி 11

### சந்நிதி முருகன் தேர்த்திருவிழாவில்
## சுமார் 70 பவுண் நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியவர்களிடம் சுமார் 70 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 11

### யாழிலிருந்து அம்பாந்தோட்டை வரை
## பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிராக கையெழுத்து பிரசாரம்
### மாவிட்டபுரத்தில் இன்று காலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9மணிக்கு மாவிட்டபுரம், கந்தசாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகும் குறித்த ஊர்திவழிப் போராட்டம் காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையாக நடைபெறவுள் 11

## வவுனியாவில் கோயில் திருவிழாவில் வாள்வெட்டு
### மூவர் படுகாயம்; இரு பெண்கள் உட்பட 9 பேர் கைது

(வவுனியா)
வவுனியாவில் ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் இரு பெண்கள் உட்பட9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பிள் 11

### அரிசி, பருப்பு உள்ளிட்ட
## 7 பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)
சதொச மூலம் விற்பனை செய்யப்படும் அரிசி, பருப்பு உள்ளிட்ட 7 வகையான பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சதொசவின் தலைவர் பசந்த யாப்பா, அத்தியாவசிய பொருட்கள் 11

## ஐ.எம்.எப் உடனான ஒப்பந்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது
### சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இலங்கை செய்து கொண்ட ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தில் வரிகள் தொடர்பான சில முக்கிய விடயங்கள் உள்ளதால் அது தொடர்பான விபரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்க முடியாது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட ஊழியர்கள் மட்ட ஒப்பந்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி விவாதத்திற்கு அழைப்பு விடுக்க உள்ளதாகவும் எனவே அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பிக்குமாறும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல், டலஸ், மொட்டுக்கட்சியினருடன் புதிய கூட்டணி உருவாக்கத் திட்டம்

## பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம

(கொழும்பு)

விமல், டலஸ் மற்றும்மொட்டு கட்சியின் உறுப்பினர்களை இணைத்துப் புதிய கூட்டணியை எதிர்காலத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை



எடுக்கவுள்ளதாக புதிய இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் தமது மகன் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதுடன், தாம் பதுளை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து, பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், அமைச்சு பதவிகளை ஏற்கப் போவதில்லை.

மோசடியாளர்களில் பலர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ள நிலையில், அவர்களுடன் அமைச்சரவையில் அங்கம் வகிக்க போவதில்லை என புதிய இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார். (ம-7)


யாழ்.மக்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியிலான ரஷ்ய புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்
1ஆம் குறுக்குத்தெருவில் அமைந்த
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை
மாவட்ட அலுவலக மண்டபத்தில்

செப்டெம்பர் 10 - 11

50% மேல் விசேட கழிவுகள் வழங்கப்படும்

கணிதம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், அரச அறிவியல், சிறுவர்களுக்கான புத்தகங்கள் உட்பட மார்க்சிஸ - லெனின் நூல்கள் விற்பனைக்கு



ஏற்பாடு (12719)
முற்போக்கு பிரசுர நிலையம்


# சனி, ஞாயிறு மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாட்டில் சனி, ஞாயிறு தினங்களில் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஒரு மணித்தியாலம் மின்துண்டிப்பு மேற்கொள்ள மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் திங்கட்கிழமை A,B,C,D,E,F, G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலம் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், கொழும்பு முன்னுரிமை வலயங்களில் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரையான காலப்பகுதிக்குள் ஒரு மணித்தியாலம் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

# வீரசேகர கைது

சமூக செயற்பாட்டாளரான லஹிரு வீரசேகர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி மருதானை பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(ம-7)


வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு வீடியோ எடிற்றர் தேவைப்படுகின்றனர். முன் அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

- ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்
- வயது (18–30)

(12728)

077 621 6741
075 227 8354


# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி கந்தசாமி

மண்ணில் 16.12.1932 | விண்ணில் 09.09.2022



"வியாழாவத்தை" நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வாழிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தசாமி நேற்று (09.09.2022) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமியின் (வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தவனம் - வேதநாயகம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற வல்லிபுரம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கம், மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாஜினி, கெங்கா, உதயணன் (அவுஸ்திரேலியா), அனுசியா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பத்மநாதன் (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, நெல்லியடி), இராமகிருஷ்ணா (ஓய்வுநிலை கணித மூலவள நிலைய பொறுப்பாசிரியர், வடமராட்சி), சாந்தி (அவுஸ்திரேலியா), பத்மராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பாமினி, பாலநந்தன் (லண்டன்), நிரூஜா (ஆசிரியர் - வட இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி), ஞானசம்பந்தன், ஜனனி, காங்கேசன், விஜய், நிலானி (அவுஸ்திரேலியா), கஸ்தூரி, துவாரகன், லஷ்மன், துர்க்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துஷானா, ஹரிஸ், பிரணவி, அனங்கன், இனியா, அபிராம் ஆகியோரின் அன்புப் பீட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 8 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

வியாழாவத்தை, நெல்லியடி,
கரவெட்டி. 0778448254 (C-4890)


சைவ வித்தியா விருத்திச் சங்கம்
பதவி வெற்றிடங்கள்

**நிர்வாக அலுவலர் - பெண்**
- க.பொ.த உயர் தரத்தில் சித்தி அல்லது சமமான கல்வித் தகைமை.
- கணினி அறிவு.
- அரச, தனியார் துறைகளில் 05 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம். (ஓய்வு பெற்ற அதிபர்கள், நிர்வாகிகள் பொருத்தமாயிருப்பர்)
- வயதெல்லை : 40 - 65

**உள்ளகக் கணக்காய்வாளர் - பகுதி நேரம்**
- க.பொ.த (உ/த) இல் வணிகப் பிரிவில் சித்தி அல்லது அதற்கு சமமான கல்வித் தகைமை.
- கணினி அறிவு.
- வயதெல்லை : 25 - 50

**நூலகர் - பகுதி நேரம்**
- க.பொ.த (உ/த) வுக்குக் குறையாத கல்வித் தகைமை.
- நூலகப் பயிற்சியில் சான்றிதழ் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயதெல்லை : 25 - 50

**பண்ணைத் தொழிலாளி**
- நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை : 35 - 55
- பண்படுத்தல், நீர்ப்பாசனத்தில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**தொழிலாளி**
- அலுவலகத்திலும் சைவச் சிறுவர் இல்லங்களிலும் பணியாற்றுவதற்கு நல்ல ஆரோக்கியமுள்ள, சுறுசுறுப்பானவராக இருத்தல் வேண்டும்.
- கல்வித் தகைமை : க.பொ.த (சா/த)
- வயதெல்லை : 35 - 55


❖ எல்லாப் பதவிகளுக்கும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 23.09.2022 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(C-4893)

கலாசாலை வீதி, திருநெல்வேலி. 021 222 6525 தி.செல்வமனோகரன் செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.வடமராட்சி செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை வெகுசிறப்பாக நடைபெற்றது. இதன்போது பல்லாயிரக்கணக்கான-அடியவர்கள் புடைசூழ சந்நிதி வேற்பெருமான், சண்முகப் பெருமான், விநாயகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்கள் முத்தேர்களில் எழுந்தருளி அருள்பாலித்தனர். (படங்கள்: மகாலிங்கம், ரவிசாந், சிவசாந்தன்)

# இலங்கைக்குள் ஒரு போதும் அரசியல் தீர்வு கிடையாது

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்குள் ஒரு போதும் அரசியல் தீர்வு கிடையாது. அரசியல் யாப்ப உருவாக்கப் போவதாகக் கூறினாலும் ஒற்றையாட்சியை சுற்றிச் சுற்றி தான் இருக்குமே ஒழிய எங்களை நாங்கள் ஆளக்கூடிய ஒரு கௌரவமான தீர்வு கிடைக்காது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதியைக் கோரி ஈழத் தமிழினம் போராடி வருகிறது. முள்ளிவாய்க்காலில் யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஜெனிவாவில் எங்கள் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் தரப்புகள் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். பிரதான மூன்று அணிகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை உட்பட குற்றங்களுக்காக ஈடு செய் நீதியை பெறக்கூடிய விதத்திலும், இனப்படுகொலை மீண்டும் இடம்பெறாமல் இருக்க ஐ.நா சபையின் கண்காணிப்பில் வடக்கு, கிழக்கு மாநிலத்தில் பொதுசன வாக்கெடுப்பை நடாத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தைக். கோருகின்றோம் என அவர் தெரிவித்தார். (4-104)

# துன்னாலை வடக்கு நவிட்டான்பதி காளிகாம்பாள் ஆலய கும்பாபிஷேகம்

(கரணவாய்)

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான நூதன புனருத்தான சம்பரோஷண மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை இடம் பெறும்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து காளியம்பிகை, விநாயகர், முருகன், வைரவர் போன்ற நூதன விக்கிரகங்கள் கிராமத்தை வலம் வந்தன.

பின்னர் மாலை கிரியைகள் நடை பெற்றன. இன்று சனிக்கி ழமை(10) காலை 8.00 மணியிலிருந்து எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு மாலை கிரியைகள் ஆரம்பமாகும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி பிரதமை திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணி 03 நிமிடம் முதல் 10 மணி 33 நிமிடம் வரையான சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம் பெறும். (4-60)

# அரசியல் தீர்வு வேண்டி குருநகரில் போராட்டம்




(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வினை வலியுறுத்தி நேற்று முன்தினம் வியாழக்கிழமை குருநகர்ப் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சிறுபான்மை இன மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் 100 நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 39 ஆவது நாள் நிகழ்வாக குறித்த போராட்டம் குருநகரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (4-30)

# ஆண்டு விழா

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுரம் அம்பாள் சனசமூக நிலையத்தின் 38 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

நா.திருச்செல்வம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவும் கௌரவ விருந்தினர்களாக சந்திரபுரம் கிராம உத்தியோகத்தர் பா.சுபாசன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கா.ஶ்ரீரங்கலிங்கம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தயாளன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-30)

# ஓவியக் கண்காட்சியும் நூல் அறிமுக நிகழ்வும்

(சாவகச்சேரி)

அ.பங்கையற்செல்வனின் "உயிர்மை" ஒளி ஓவியக் கண் காட்சியும், "நிழல்கள் சொல்லும் கதைகள்" நூல் அறிமுக நிகழ்வும் இன்று சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள ரி.பி ஹன்ற் ஞாபகார்த்தமாக ஓவியக் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த மாக ஓவியக் கூடத்தின் ஸ்தாபகர் யோகமணி அழகரத்தினம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூல் அறிமுக உரையினை [illegible] நூலை அறிமுகம் செய்து வைக்கவுள்ளார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## — விராட் அதிரடி சதம் —

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி




ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்றின் ஐந்தாவது போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

துபாயில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணியும் ஆப்கானிஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 212 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக விராட் ஹோலி ஆட்டமிழக்காது 122 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், பாரீட் அஹமட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


இதனைத்தொடர்ந்து 213 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 111 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், இந்தியக் கிரிக்கெட் அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, இப்ராஹிம் சத்ரான் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும் முஜிப்புர் ரஹ்மான் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், புவனேஸ்வர் குமார் 5 விக்கெட்டுகளையும் ஹர்ஸ்தீப் சிங், அஸ்வின் மற்றும் தீபக் ஹூதா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 61 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 12 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 122 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட விராட் ஹோலி தெரிவுசெய்யப்பட்டார். (4)

# வீதி பாதுகாப்பு உலகத்தொடர் இன்று ஆரம்பமாகிறது



வீதி பாதுகாப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீதி பாதுகாப்பு உலகத் தொடர் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபையின் அனுமதி யுடன் கிரிக்கெட் இரசிகர் களின் ஏகோபித்த வரவே ற்பை பெற்றுள்ள இப்போட் டித் தொடரானது, முதல் அத்தியாயத்தை போலவே இம்முறையும் இருபது- 20 கிரிக்கெட் போட்டியாக நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூ ஸிலாந்து, தென் ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகி யவற்றின் லெஜெண்ட்ஸ் அணிகள் இப்போட்டித் தொடரில் பங்கேற்கின்றன.

சச்சின் டெண்டுல்கர், சனத் ஜயசூரிய, பிரையன் லாரா, சமிந்த வாஸ், ஜொண்டி ரோட்ஸ், லான்ஸ் க்ளூாஸ்னர், பிரெட் லீ, கிரேய்க் மெக் மிலன், இயன் பெல், அப்துர் ரசாக் ஆகிய கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2696

தர்ஷா




ஆகாஷ்





சுவேதா





விதுசன்




அனோஜா




டியூரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத ரணில் அரசாங்கம்-மீனாட்சி கங்குலி

**(கொழும்பு)**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நிர்வாகம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் உறுதியளிக்கவில்லை என்பதை உணர்த்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.**

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப் பட்டனர்.

அவர்களில் மூன்று பேர் கடுமையான உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என்று கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், லொஹான் ரத்வத்தே, சனத் நிஷாந்த ஆகியோர் மீதே இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மோசமான அமைச்சு நியமனங்கள் மற்றும் அமைதியான எதிர்ப்புக்களுக்கு அதன் கடுமையான பிரதிபலிப்பு. இலங்கையின் உரிமைகள் நிலைமை வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**அமரர். ஆறுப்பிள்ளை சின்னம்மா**

தோற்றம் 02 ❖ 05 ❖ 1940



மறைவு 21 ❖ 08 ❖ 2021

கடந்த 21.08.2021 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர்.ஆறுப்பிள்ளை சின்னம்மா அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று 10.09.2022 சனிக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து அன்னையின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு,
பக்கார்.

(12720)

குடும்பத்தினர்.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 – 04 – 1936



இறப்பு 10 – 09 – 2007

**அமரர்.சின்னத்தம்பி சுப்பையா**

(பிரபல வர்த்தகர்-செட்டிக்குளம்)

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவனே
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவனே
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
அழியாது என்றும் உன் நினைவுகள்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(12718)

## இராசிபலன்

10.09.2022
ஆவணி 25, சனிக்கிழமை
பூரணை பிற்பகல் 4.33 மணிவரை
சதயம் முற்பகல் 11.13 மணிவரை
சுப நேரம் -3.03-4.33 மணிவரை
இராகு காலம் -9.03-10.33 மணிவரை
சந்திராஷ்டமம்-ஆயிலியம்.

வளவன்

**மேஷம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** முன்னேற்றமும் அலைச்சலும் ஏற்படலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும்.

**ரிஷபம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கும்பம்** உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம்.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பகையொன்று நட்பாகலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், உடல் நலன் சீராகும் வாய்ப்புண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூர தேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டுக்கு சமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### துள்ளின மாடு!



(நேற்றைய தொடர்ச்சி)

பற்களை 'நற நற' வெனக் கடித்துக் கொண்டு "தவறா? எப்படி தம்பி!" என்று கண்களை உருட்டியவாறே கேட்டார்.

விகடகவி "ஐயா! 'சர்வே ஜனா சுகினோ பவந்து' என்பது நூற்றுக் கணக்கான வருடங்களாக யாவராலும் சொல்லப்பட்டு வருவது. பண்டிதர்கள், அறிஞர்கள் யாவரும் தம் அனுபவ ஞானத்தால் இதனைச் சிறந்ததாக ஏற்று வந்திருக்கிறார்கள். சுகம் என்றால் என்ன என்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

கோவிந்தய்யா அவனை விழுங்கி விடுபவர் போல முறைத்துப் பார்த்தார். விகடகவியோ சற்றும் சளைக்காமல் "உமக்குத் தெரியாது. நான் சொல்கிறேன். கேட்டுக் கொள்ளும். பணம் காசும் பகட்டான மாளிகையும் இருந்தாலே மனிதன் சுகம் பெற்று விடுவானா? இல்லை. சுகம் மனதால் உணரப்படுவது. ராட்சஸ குணம் படைத்த கொலையாளிகளும் திருடர்களும் சுகமாக இருக்கவே முடியாது.

எந்த நிமிடத்திலும் தம்மைக் காவல் வீரர்கள் பிடித்து விடுவார்களோ என்று பயந்து கொண்டே இருப்பார்கள்.

அப்படிபட்டவர்கள் கூட சுகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுவது அவர்கள் தம் கொடிய இழி செயல்களை விட்டொழித்து நல்வழியில் சென்று சுகம் காணட்டும் என்பதற்கே. இதுதான் 'சர்வே ஜனா சுகினோ பவந்து' என்பதன் பொருள்.

எனவே, எவன் மனதில் திருப்தி உள்ளதோ அவன் சுகப்படுவான்" என்றான்.

இந்த விளக்கம் கேட்டு பண்டிதர்களும் அங்கிருந்த மற்றவர்களும் கைதட்டி மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் விகடகவிக்குத் தெரிவித்தார்கள். கோவிந்தய்யாவின் முகத்தில் ஈயாடவில்லை.

அதுகண்டு விகடக்வி "ஐயா! நீ மாபெரும் பண்டிதர் என்பதில் ஐயமில்லை. ஆனால் கர்வத் தால் விதண்டாவாதம் புரிகிறீர்கள். நீர் உலகிற்கு இலக்கியங் களிலுள்ள நல்ல விடயங்களை எடுத்துக் கூறும்.

குறையையும் வேண்டத் தகாதவற்றை ஒதுக்கிவிடும். இதுதான் நீர் செய்ய வேண்டிய நற்பணி" என்றான்.


கோவிந்தய்யா மறுபேச்சுப் பேசாமல் அங்கிருந்து தலை குனிந்தவாறே எழுந்து சென்றார்.

அங்கிருந்த பண்டிதர்கள் விகடகவியை பாராட்டினார்கள். மன்னனும் அவனைப் பாராட்டிப் பரிசளித்தான்.

(முற்றும்)

## சிலப்பதிகாரம்

### வரவேற்காத குவளை மலர்கள்




அவளுடைய கண்களில் இருந்த உற்சாகம் கவுந்தி அடிகளையும் கோவலனையும் பற்றிக் கொண்டது.

ஆற்றைக் கடக்கும் வழியைத் தேட ஆரம்பித்தார்கள்.

பக்கத்தில் ஒரு கட்டுமரம் தென்பட்டது. அதில் ஏறித் தென் கரையை அடைந்தார்கள்.

வாழ்க்கைகூட ஒரு கட்டுமரம்தான். விடாமுயற்சி என்கிற துடுப்பைப் போட்டு அதை நகர்த்திக் கரை சேரத்தான் கோவலன் போய்க் கொண்டிருந்தான்.

ஆனால், மறுகரை போவதற்குள் அவன் சந்திக்க வேண்டிய சுழல்கள் நிறைய இருந்தன. அவற்றை அவன் அறிந்திருக்கவில்லை.

சிறிது நேரத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் தென்கரையை போய்ச்சேர்ந்தார்கள். கட்டுமரத்திலிருந்து இறங்கினார்கள். படித்துறை வழியாக மேலேறினார்கள்.

மதுரை நகருக்குள் நுழைகிற இடத்தில் பெரிய அகழி இருந்தது. ஆனால், அதன் குறுக்கே இருந்த பாலம் தூக்கப்பட்டிருந்தது. பாண்டியனின் ரதமோ படைகளோ வரும்போதுதான் அந்தப் பாலம் கீழே இறக்கப்படும்.

ஆகவே. அவர்கள் அந்த அகழியைச் சுற்றி இருந்த குறுகிய பாதையில் வலம் வந்து தான் நகருக்குள் நுழைய முடியும். தொடர்ந்து நடந்தார்கள்.

அகழியில் கொத்துக் கொத்தாக குவளை மலர்கள் பூத்திருந்தன. அந்தக் குவளை மலர்களில் தேன் குடிப்பதற்காக ரீங்காரம் இடும் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவைகளின் ரீங்கார ஒலி அழுகுரல் போல ஒலித்தது.

ஒரு வேளை அவை கண்ணகிக்கும் கோவலனுக்கும் வர இருக்கும் துன்பங்களை நினைத்து அழுகின்றனவோ?

குவளை மலர்கள் காற்றில் இடமும் வலமுமாகத் தலையை ஆட்டின.

அந்தப் பூக்கள் காற்றில் அசைவது வேண்டாம். வராதே என்று தடுக்கிற எச்சரிக்கையோ?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 73

2001 உக்ரைனிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 68.8% க்கும் அதிகமான மக்கள் தங்களை ரஷ்ய மொழி பேசுபவர்களாகக் கருதுகின்றனர். அதேநேரத்தில் 30.0% பேர் தங்களை உக்ரைனிய மொழி பேசுபவர்களாக கருதுகின்றனர். பிராந்தியத்தின் தெற்குப் பகுதியிலும் லுகான்ஸ்க் நகரைச் சுற்றிலும் ரஷ்யமக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதேசமயம் வடக்குப் பகுதி மக்கள்தொகை குறைவாக உள்ளது. அங்கு பெரும்பாலும் விவசாயம் செய்பவர்கள் உள்ளனர். அவர்கள் உக்ரைன் மக்களாவர்.




**2014 இல் டான்பாஸில் நடந்த போரினால் லுஹான்ஸ்க் மாநிலத்தின் ஒருபகுதி ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.**

இதுபற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

### தோனேஸ்க் மாநிலம்

இதன் பரப்பளவு 26,517 சதுர கி.மீ மக்கள் தொகை 4.6229 மில்லியன் ஆகும்.

தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) மாநிலம் நிறுவப்படுவதற்கு முன்பு அதன் எல்லையில் 1923 முதல் 1930 வரை மூன்று பிராந்தியங்கள் இருந்தன. டொனெட்ஸ் கவர்னரேட் 1925 இல் இல்லாமல் ஆக்கப்பட்டது. சோவியத் உக்ரைனின் ஒரு பகுதியாக கார்கிவ் மாகாணத்தில் இருந்து 2 ஜூலை 1932 அன்று தோனெட்சியன் மாநிலம் நிறுவப்பட்டது. 1938 வரை தோனெட்சியன் மாநிலம் தற்போதைய தோனேஸ்க் மாநிலம் மற்றும் லுகான்ஸ்க் பிராந்தியத்தின் பிரதேசங்களை உள்ளடக்கி இருந்தது. ஜூன் 1938 இல் இது ஸ்டாலினோ மாநிலம் (தற்போதைய தோனேஸ்க் மாநிலம்) மற்றும் வோரோஷிலோவ்ஹ்ராட் மாநிலம் தற்போதைய லுகான்ஸ்க் மாநிலம் எனப் பிரிக்கப்பட்டது.

**தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) மாநிலம் அதிக மக்கள்தொகை கொண்ட பிரதேசமாகும். அதன் நிர்வாக மையம் தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) நகரம் ஆகும். இருப்பினும் தோனேஸ்கில் நிலவும் பிரிவினைவாத நெருக்கடியின் காரணமாக அதன் பிராந்திய மாநில நிர்வாகம் தற்காலிகமாக கிராமடோர்ஸ்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

1941-1943 காலகட்டத்தில் நாஜி ஜேர்மன் ஆக்கிரமிப்பின் போது, தோனேஸ்க் மாநிலம் யுசிவ்கா மாநிலம் என்று அறியப்பட்டது. 1953 இல் நீண்டகால சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் மரணத்தைத் தொடர்ந்து நிகிதா குருஷ்சேவ் பதவியேற்ற பிறகு சோவியத் யூனியனில் தொடர்ச்சியான அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒரு பகுதியாக, 1961 இல் ஸ்டாலினோ மற்றும் ஸ்டாலினோ பிராந்தியம் முறையே தோனேஸ்க் மற்றும் தோனேஸ்க் மாநிலம் என மறுபெயரிடப்பட்டது.

**7 ஏப்ரல் 2014 அன்று உக்ரைனின் கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து, தோனேஸ்க் மாநிலத்தின் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய ஆதரவு போராளிகள் உக்ரைனிலிருந்து பிரித்து தோனேஸ்க் மாநிலத்திற்கு சுதந்திரம் அறிவித்தனர்.**

மற்றும் 11 மே 2014 அன்று உக்ரைனிலிருந்து அம் மாநிலம் பிரிவதற்கு அங்கீகரிக்கப்படாத வாக்கெடுப்பை நடத்தினர். அதைத் தொடர்ந்து, டான்பாஸில் போர் தொடங்கியது.

தோனேஸ்க் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்த பிறகு, தோனேஸ்க் மாநில நிரவாகம் மரியுபோலுக்கும் பின்னர் கிராமடோர்ஸ்க்கும் இடமாற்றம் செய்யப்பட்டது.




(தொடரும்)

## எலிசபெத் மகாராணியின் மறைவையொட்டி ஈபிள் கோபுர விளக்குகள் அணைப்பு

(பாரிஸ்)

இங்கிலாந்து சாம்ராஜ்ஜியத்தின் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையொட்டி பிரான்ஸின் ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் நேற்று முன்தினம் இரவு அணைக்கப்பட்டன.



உலகின் அதிசயமாக தொடர்ந்து வரும் ஈபிள் கோபுரம் கடந்த 1997 ஆம் ஆண்டு இளவரசி டயானாவின் மரணத்திற்கு இவ்வாறு அணைக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் நேற்றிரவு மகாராணியாரின் மரணத்தையொட்டி அணைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டதன் மூலம் மகாராணியார் பிரான்ஸ் நாட்டு மக்களுக்கு கடந்த 70 வருட ஆட்சிக் காலத்தின் போது செய்த நன்மைகள் மற்றும் பல சாதகமான விடயங்கள் என்பன பிரான்ஸ் நாட்டு மக்களினால் நினைவு கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## மகாராணிக்கு அஞ்சலி செலுத்த பக்கிங்ஹாம் முன் திரண்ட மக்கள்



(லண்டன்)

தாங்கள் அறிந்திருந்த ஒரேயொரு முடிக்குரிய அரசிக்கு அஞ்சலி செலுத்து வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் பக்கிங்ஹாம் அரண் மனைக்கு வெளியே காணப்பட்டனர்.

எலிசபெத் மகாராணியின் மறைவுச்செய்தி வெளியானதும் மக்கள் மலர்களையும் மெழுகு திரிகளையும் வைத்து அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கில் அரண்மனை நோக்கிப் படையெடுத்தனர். (நி)

## தன்னை அணுஆயுத நாடாக பிரகடனப்படுத்தியது வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா தன்னை அணுஆயுத நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாக அரச செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ தெரிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இந்த முடிவை மாற்ற முடியாதது என்றும் அணுவாயுத மயமாக்கல் தொடர்பான எந்த பேச்சுவார்த்தைக்கும் வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அணு ஆயுதத் தாக்குதலுக்கு முன்பான தாக்குதலைப் பயன்ப டுத்துவதற்கு நாட்டின் உரி மையையும் சட்டம் உறுதி செய்கிறது.

பொருளாதாரத் தடைகள் இருந்தபோதிலும், வடகொரியா 2006 ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஆறு அணுகுண்டு சோதனைகளை நடத்தியது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறும் வகையில் தொடர்ந்து நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் அணுசக்தி சோதனைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அரசரானார் சார்லஸ்



(லண்டன்)

இங்கிலாந்தின் மகாராணி எலிசபெத் காலமானதை அடுத்து உடனடியாகவே வேல்ஸின் முன்னாள் இளவரசர் அரசராக அறிவிக்கப்பட்டுள்ளார். பக்கிங்ஹாம் அரண்மனை குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அவர் ஐக்கிய இராச்சியத்தினை வழிநடத்துவார் என்றும் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## உக்ரைனுடனான போரில் பின்வாங்கும் ரஷ்யா

(கீவ்)

ரஷ்ய உக்ரைன் போரில் தற்போது உக்ரைன் தனது அதிரடியாட்டத்தை காட்டத் தொடங்கியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர் தோல்விகளினால் துவண்டு போயிருந்த உக்ரைன் தற்போது வீறு கொண்டு எழுந்திருப்பதாகவும் அதிரடித் தாக்குதல்களால் இழந்த தமது நிலப்பரப்புக்களை மீண்டும் மீட்டு வருவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இழந்த நிலப்பரப்புக்களை மீட்டெடுக்கும் போரில் உக்ரைனுக்கு இன்னும் இராணுவத் தளபாடங்கள் தேவைப்படுவதாகவும் மேலும் ஐரோப்பிய நாடுகள் உடனடியாக ஆயுதங்களை வழங்கி உக்ரைனின் நிலப்பரப்புக்களை மீட்பதற்கு உதவி செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் உக்ரைனுக்கு இரகசிய பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க செயலாளர் அன்ரனி பிளிங்கடன் உக்ரைனின் தெற்கு பகுதியில் ரஷ்யாவிடம் இருந்து மீட்டெடுத்த பகுதிகளை பார்வையிட்டிருந்ததுடன் உக்ரைன் பயன்படுத்தும் அமெரிக்க ஆயுதங்களையும் பார்வையிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வீதமான உணவகங்கள் இதுவரை மூடப்பட்டுள்ளன

## உணவக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்புடன் நுகர்வோர் அந்தப் பொருட்களை கொள்வனவு செய்யாத நிலையும் அதிகரித்து வருவதாக-அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக உணவகங்கள் 'மூடப்படும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடகை அடிப்படையில் நடத்தப்படும் சுமார் 35 வீதமான உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# மறைந்த எலிசபெத் மகாராணிக்கு இலங்கை பாராளுமன்றத்தில் அஞ்சலி

(கொழும்பு)

மறைந்த எலிசபெத் மகாராணிக்கு இலங்கை பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இதன்போது இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி)

# திடீரென ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமானது. இந்நிலையில் நேற்றைய அமர்வில் 10 இற்கும் குறைவான எம்.பிக்களே வருகை தந்ததன் காரணமாக பாராளுமன்றம் செப்டெம்பர் 20 காலை 9.30 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (நி)

# சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை நாட்டிற்கு அழைக்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் சார்க் வெளி விவகார அமைச்சர்களை அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம்

# நிறுவுநர் தின சிறப்பிதழ் - 2022 செப்டெம்பர் - 10

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

சோமாஸ்கந்தக் கல்லூரி அமைந்துள்ள யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் இக் கல்லூரியின் ஸ்தாபகர் உயர்திரு. மழவராயர் கந்தையா அவர்களினால் இக்கல்லூரியினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சோமாஸ்கந்தக் கல்லூரியின் தர்மகர்த்தா சபையின் தலைவர் என்ற வகையில் இக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசில்தினமும் சிறப்படைய வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

இலங்கை அரசாங்கம் அனைவருக்கும் கல்வி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இலவசக் கல்வியினை வழங்க முற்பட்டமைக்கு முன்னதாகவே புத்தூர் கிராமத்தில் தனி ஒருவரின் சிந்தனையில் இலவசக்கல்வி பற்றிய சிந்தனை உதயமாகியதன் விளைவாகவே இக் கல்லூரி மிளிர்வதற்கு அடிகோலியது. அவர் பெரும் பொருட் செல்வத்தை கொண்டு இப்பாடசாலையை உருவாக்கியதோடு மட்டுமல்லாது அதன் இடையறாத கல்விப்பணிக்காக ஏராளமான சொத்துக்களின் வருமானங்களை பாடசாலைக்கு பயன்படும் படியாக ஏற்பாடு செய்து அதனை நிர்வகிப்பதற்காக ஒரு தர்மகர்த்தா சபையினையும் நிறுவிப் பெரும் சமூகப்பணி புரிந்தார்.

பாடசாலையோடு புத்தூர் சிவன் தேவஸ்தானம் மற்றும் அன்னதான சத்திரம் ஆகியவற்றையும் அமைத்து அவற்றிற்கு பெரும் செல்வங்களை வழங்கியுள்ளமையை அறிய முடிகின்றது. இன்று பாடசாலை பல சிறப்புக்களையும் சாதனைகளையும் தன்னகத்தே கொண்டு கோப்பாய் கோட்டத்தின் சகல வளங்களும் கொண்ட பாடசாலையாகத் திகழ்வது வள்ளலாரின் அற்பணியின் சிறப்பாலே ஆகும்.

மேலும் இப் பாடசாலை சாதனைகளின் சிகரங்களைத் தொடவும் இறைவனை வேண்டுவதோடு இன்றைய நன்நாளில் பரிசில்களைப் பெறுகின்ற மாணவச் செல்வங்களையும். அயராது உழைக்கின்ற பாடசாலைச் சமூகத்தினரையும் மனமகிழ்வோடு வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**திரு.மு.இராதாக்கிருஷ்ணன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களால் 1931 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது இன்று ஒரு 1AB பாடசாலையாகத் திகழ்கின்றது. அமரர். மழவராயர் கந்தையா அவர்களால் இப்பாடசாலைக்குச் சொத்துக்கள் வழங்கப்பட்டு. தர்மகர்த்தா சபையானது அமைக்கப்பட்டது. பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவது. பிற பாடச்சாலைகளுக்கில்லாத இப்பாடசாலைக்கே உரித்தான சிறப்பம்சமாகும். இப்பாடசாலையில் இன்று 1163 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். வருடாந்தம் பல்கலைக்கழகம். தேசிய கல்வியியற்கல்லூரி. பிற கற்கை நெறிகள் என்பனவற்றிற்குப் பெருமளவான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது பாராட்டுக்குரியது. இன்று இப்பாடசாலையானது அதிபர். ஆசிரியர்கள். பாடசாலைச் சமூகத்தினரின் ஒன்றிணைவால். முன்மாதிரியான பாடசாலையாகத் திகழ்ந்து வளர்ந்து வருகின்றது. மென்மேலும் வளர எனது ஆசியும் வாழ்த்துக்களும்.

**திரு.நா.சிவநேசன்,**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.**

## தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் கல்வி பாரம்பரியத்தில் சைவத்தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் மையமாக விளங்கும் புத்தூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கென ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. அத்தகைய பாரம்பரிய வரலாறானது வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் அறம்பணிகளால் விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் ஆலயம். கல்விக்கூடம். அன்னசத்திரம் முதலான தர்மப்பணிகளைச் செய்ததோடு அவை சிறப்புற செயற்பட வேண்டும் என அசையும். அசையாச் சொத்துக்களையும் வழங்கி அவை செவ்வனே செயற்படுவதனை நிர்வகிக்கவென தர்மகர்த்தாக்களையும் அமைத்துள்ளார்.

அமரர் அவர்களால் செயற்படுத்தப்பட்ட கல்விக்கூடமானது 91 ஆண்டுகளை அடைந்து பல ஆயிரக் கணக்கான கல்விமான்களை உருவாக்கி ஆலமரமாக வளர்ந்துள்ளமை வெள்ளிடை மலை.

ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வளம் மாணவர்களே. இவர்கள் சிறந்த கல்வியைப் பெற்று உயர்நிலையடைந்து மேலும் நாடு போற்றும் கல்வியாளர்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் நாமம்
வளர்க அவர் பணி

**தர்மகர்த்தா சபையினர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**



**உயர்திரு.மழவராயர் கந்தையா**
**ஸ்தாபகர்**

தந்தை:- சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்
தாய்:- சின்னையா மகள்- சின்னத்தங்கச்சிப்பிள்ளை
தோற்றம்:- 10.09.1887 (விபவ ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாள் ரோகிணி நட்சத்திரம்)
மறைவு- 15.05.1936 (வைகாசி மாதம் பூர்வபக்ஷ பஞ்சமி)
அத்திபார தினம்:- தைமாத அத்த நட்சத்திரம்
வித்தியாரம்பதினம்:- வைகாசி மிருகசீரிட நட்சத்திரம்

## வள்ளலாரின் பணிகள்:

- **விசாலாட்சி சமேத விசுவநாத பெருமானுக்கான ஆலயம் (புத்தூர் சிவன் ஆலயம்) அமைத்தமை.**
- **புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்து இலவசக் கல்வி போதனையை மேற்கொண்டமை.**
- **ஏழைகளின் பசிப்பிணி தீர்க்க அன்ன சத்திரம் அமைத்தமை.**
- **நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைக்க கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.**
- **கோடிக்கணக்கான சொத்தை உலக நன்மைக்கு தர்ம சாதனங்களைச் செய்தமை.**

## பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

வரலாற்று மேன்மைகளையும் சமய அற்புத நிகழ்வுகளையும் உயர் பண்பாட்டு விழுமியங்களையும் ஒருங்கே அமையப்பெற்ற புத்தூர் பதியில் அமரர். வள்ளல் மழவராயர் அவர்களும் அவர் மகன் கந்தையாவும் இணைந்து ஆன்மீகப் பசிக்கு மருந்தாகவும் அறிவுப் பசிக்கு விருந்தாகவும் வயிற்றுப் பசிக்கு உணவாகவும் சிவதர்மப் பணிகளைச் செய்ததுடன் அவை எந்தவித தடங்கலுமின்றி செயற்பட அசையும். அசையாச் சொத்துக்களையும் வழங்கி தனக்கென ஓர் இடத்தை ஆழப்பதித்துள்ளார். அமரர் அவர்களின் பணிகள் எல்லோர் மனங்களிலும் என்றென்றும் நினைவுகூரப்படுகிறது.

அமரர் பணியால் மேன்மையுற்ற கல்லூரியில் கல்வி கற்ற பலர் உள்நாடுகளிலும். புலம் பெயர் நாடுகளிலும் உயர் நிலையில் பணிபுரிந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். காலமறிந்து சூழலறிந்து தேவையறிந்து அனைவருக்கும் கல்வியினை வழங்கி 90 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று கல்லூரியானது தேசியப் பாடசாலையாக மிளிர்வதையிட்டு அனைவரும் மகிழ்வடைகின்றோம்.

நிறுவுநர் நினைவு நாளும். பரிசில் தினமும் நடைபெறுகின்ற இன்றைய நன்நாளிலே எண்ணிய பணிகளையெல்லாம் திண்ணியமாய் முடித்த கலங்கரை விளக்கான அமரர் அவர்களை அனைவரும் ஒன்றிணைந்து நினைவு கூர்வதோடு அவரது எண்ணங்கள் ஈடேறி மென்மேலும் உயர்நிலையடைந்து "கற்றாங்கு ஒழுகுக" என்ற மகுடவாசகத்திற்கு அமைவாக மாணவர்கள் ஒழுக்கசீலர்களாகவும் நாடு போற்றும் கல்வி விற்பன்னர்களாகவும் வளர வாழ்த்துகின்றோம்.

வாழ்க அமரர் பணி!
வளர்க கல்லூரி!

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,**
**புத்தூர்.**

## சிவாச்சாரியரின் ஆசிச்செய்தி

ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் நிறுவுனராகிய மழவராயர் கந்தையா அவர்களின் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவாகிய இந் நன்நாளில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் நன்கு கல்வி கற்று இந்தக் கல்லூரிக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை தேடித்தர வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**சாமி சோமசுந்தரக்குருக்கள்,**
**சிவன் தேவஸ்தானம்,**
**புத்தூர்.**

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

"நான் கற்பிப்பது அறிவையல்ல அறிவைஅறியும் அறிவையே."
-ஆர்னால்ட்

இவ் அறிஞரின் கருத்திற்கு அமைய வள்ளலாரின் செயல் அமைந்திருக்கிறது எனலாம். ஒரு மனிதனைப் புனிதமாக்க அறிவு ஒன்றே ஆயுதம் எனக்கருதியதன் விளைவே இக் கல்லூரியின் தோற்றம் எனலாம்.

அன்னாரின் அன்றைய சிந்தனை இன்று எத்தனை சிறார்களுக்கு அறிவுப்பசியை போக்கியிருக்கிறது. மறைந்த வள்ளலாரின் பணிகள் இன்றும் மங்காமல் மறையாமல் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வள்ளலார் அமைத்த கல்லூரியில் நானும் கல்வி பயின்றவன் என்கின்ற ரீதியில் மகிழ்வடைகிறேன். அன்னார் இக் கல்லூரியை உருவாக்கும் போது எவ்வெவ் சிந்தனைகள் மனதில் தோன்றினவோ அவற்றை எம் மாணவர்கள் சிறப்புறப் பெற்று கல்வி. கலை. பண்பாடு. ஒழுக்கம் என யாவற்றிலும் சிறந்து கல்லூரியின் புகழைப் பறைசாற்ற வேண்டுமென நிறுவுநர் நாளும் பரிசில் தினமான இந் நன்நாளில் இறைவனை வேண்டுகின்றேன்.

இன்று எமது கல்லூரி வசதிமிக்க விஞ்ஞான ஆய்வு கூடம். தொழில்நுட்ப ஆய்வுகூடம். புத்தாக்க ஆய்வுகூடம். கணித ஆய்வு கூடம் என பல வளங்களையும் பெற்று தேசியப்பாடசாலை. மும்மொழிப்பாடசாலை என்ற புகழ் நாமங்களை சூடி நிற்கின்றது. இக் கல்லூரி மேலும் சிறப்படைந்து வள்ளலாரின் புகழ் மணம் பரப்ப இதய சுத்தியுடன் பணி செய்ய இந்நாளில் திடசங்கற்பம் பூணுவதோடு வள்ளலாரின் அருளாசியினையும் வேண்டி நிற்கின்றேன்

**திரு.சின்னத்தம்பி திரிகரன்**
**கல்லூரி முதல்வர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ,புத்தூர்.**

## ஆரம்ப பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

பல்வேறு சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு பல தசாப்தங்களாகக் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரித் தாயின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்-2022 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

அமரர்.மழவராயர் கந்தையா அவர்களின் எண்ணத்தில் உதித்த இந்தப் பாடசாலை எமது புத்தூர்ச் சமூகத்திற்கு கல்வி. கலை. அறிவியல். விளையாட்டு என அத்தனை விடயங்களையும் புகட்டும் ஓர் அறிவுக்கூடமாகத் திகழ்வதையிட்டு அமரர். மழவராயர் கந்தையா அவர்களை எமது சமூகம் என்றென்றும் நன்றியுணர்வுடன் நினைவுகூர வேண்டும். அண்மைக்காலமாக இப்பாடசாலையின் வளர்ச்சி அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே. அதற்காக அயராது உழைத்து வரும் அதிபர். பிரதி அதிபர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள். பெற்றோர்கள். தர்மகர்த்தா சபையினர். பழைய மாணவர்கள் அனைவருக்கும் இந் நன் நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை துறை ரீதியாக இன்றைய தினம் பரிசில்களைப் பெறும் மாணவச் செல்வங்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். மேலும் இக்கல்லூரித் தாயானவள் தன் மிடுக்குடன் வீறு நடைபோட எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.ஜெயகாந்தன்**
**அதிபர்,**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பொருள் அறிவன்று. அறிவுடன் கூடிய அனுதாபமேயாகும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரிட்டிஷ் மக்களுக்கு தமிழ் மக்களின் ஆழ்ந்த அனுதாபம்

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் அம்மையார் நேற்று முன்தினம் (08) காலமானார் என்ற செய்தி உலகம் முழுவதிலும் பரவியது.

96 ஆண்டுகள் வாழ்ந்த எலிசபெத் அம்மையார் 70 ஆண்டுகள் பிரிட்டிஷ் பேரரசின் மகாராணியாக இருந்த பெருமையோடு இயற்கை எய்தியுள்ளார்.

பிரிட்டிஷ் மன்னராக இருந்த ஆறாவது ஜோர்ச் மன்னரின் மகளான எலிசபெத் அம்மையார் தனது தந்தை 1952ஆம் ஆண்டு காலமானபோது, பிரிட்டிஷ் நாட்டின் முடிக்குரிய மகாராணியாகப் பதவியேற்றார்.

அன்று முதல் அவர் இறக்கும்வரையான 70 ஆண்டுகள் மகாராணியாக இருந்தார் என்ற பெருமையை முன்பும் எவரும் பெற்றதில்லை. இனியும் எவரும் பெறப் போவதில்லை என்பதுதான் உண்மை.

இதற்கு மேலாக, ஆறாவது ஜோர்ச் மன்னர் மரணமடைந்தபோது, அவரின் மகளான எலிசபெத்தை பிரிட்டிஷ் மகாராணியாக ஏற்றுக் கொண்ட பிரிட்டிஷ் மக்களின் சமத்துவ சிந்தனையின் ஓர் அடையாளமாகவும் எலிசபெத் மகாராணியாரை நாம் தரிசிக்க முடியும்.

96 வயதில் எலிசபெத் மகாராணியார் காலமானபோதிலும் அவரின் இழப்பு பிரிட்டிஷ் மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளதென்ற தகவலை அறியும்போது, பிரிட்டிஷ் மக்கள் தங்கள் நாட்டு மகாராணியார் மீதும் அரச குடும்பத்தின் மீதும் கொண்டுள்ள மேலான மதிப்பும் மரியாதையும் எத்துணை உயர்வானதென்பதை உணர முடிகிறது.

இஃது பிரிட்டிஷ் மக்களின் உன்னதப் பண்பு எனலாம்.

இவை ஒருபுறம் இருக்க, கோடான கோடி மக்கள் வாழுகின்ற இப்பெரும் உலகப் பிரபஞ்சத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் உலகத் தலைவர்களாக, உலக மக்களின் மரியாதைக்குரிய மாண்பினர்களாக – காலம் முழுவதிலும் பெருமைக்குரியவர்களாக, உயிர்ப்பிலும் இறப்பிலும் வாழுகின்ற உத்தமர்களாக உள்ளனர் என்ற அதிசயத்தை – ஆச்சரியத்தை நினைந்து நிமிர்ந்து பார்க்கும் போது, எலிசபெத் மகாராணியாரின் உருவம் தெரிகிறது.

ஆம், 70 ஆண்டுகள் பிரிட்டிஷ் நாட்டின் மகாராணி என்ற உன்னதமான பெருமையோடு வாழுதல் என்பது சாதாரணமான விடயமன்று. அது இறைவனால் கொடுக்கப்பட்ட பெரும் கொடை.

உண்மை, 1952ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாட்டின் மகாராணியாகப் பதவியேற்று 70 ஆண்டுகள் அந்தப் பதவியில் வீற்றிருந்து இறுதி வரை ஆரோக்கியமாக இருந்து தனது அரச கடமையை செம்மையாகச் செய்து 96 வயதில் காலமான எலிசபெத் மகாராணியார் இறைவனின் நெருக்கமான அனுக்கிரகம் பெற்றவர் என்பதில் ஐயமில்லை.

அவரின் இழப்பினால் சோகமுற்றுள்ள பிரிட்டிஷ் மக்களுக்கு ஈழத் தமிழ் மக்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# நிலக்கரி கையிருப்பு கிடைக்காவிட்டால் 10 மணித்தியாலங்கள் மின்வெட்டு

## மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால் நாளொன்றுக்கு சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் தடைப்படுவதற்கு இலங்கை தயாராக இருக்க வேண்டும் என இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர எச்சரித்துள்ளார். எதிர்வரும் மாதத்திற்குள் இலங்கை மின்சாரசபைக்கு போதுமான நிலக்கரி கையிருப்பு கிடைக்காவிட்டால் மின்சார உற்பத்தியைக் குறைக்க வேண்டியிருக்கும்.

தற்போது நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் அனல் மின்நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறப்படுவதாகவும் மழைக்காலம்முடிவடையும் போது இலங்கையில் நீர் மின் உற்பத்தியில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தில் ஒரு ஜெனரேட்டர் இயங்கவில்லை என்றும் நவம்பர் மாதத்திற்குள் அதை தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்க முடியும் என இலங்கை மின்சாரசபை நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## ஜனாதிபதி ரணில் ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் ஜப்பான் செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பயணத்தின் போது அவர் பல ஜப்பானிய அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்தின் பின்னர் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் பலர் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## யாழ்.பல்கலை முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்களுக்கென வடபிராந்திய போக்குவரத்து சபையினால் நாளை மறுதினம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்துக்குக்கான பேருந்து சேவை ஆரம்பமாகவுள்ளதுடன் தினமும் வடமராட்சி, தென்மராட்சி மார்க்கங்களின் ஊடாகவும் குறிப்பிட்ட நேரங்களில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்துக்கு பேருந்து சேவை இடம் பெறவுள்ளது. (4-33)

## பனை விதை விதைக்கும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ஹாட்லிக் கல்லூரி 98 ஆம் ஆண்டு அணியினால் ஒரு இலட்சம் பனம் விதை விதைக்கும் செயற்றிட்டம் இன்று மற்றும் நாளை காலை 8.30 மணிக்கு வல்லிபுரம் கோயிலை அண்டிய பகுதிகளில் இடம்பெறவுள்ளது. (4)

## ரஷ்யன் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புரோகிரசிங் பப்ளிஷிங் ஹவுஸ் பிறைவேட் லிமிட்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ரஷ்யன் புத்தகக் கண்காட்சி இன்று மற்றும் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு வீதியில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (4)

## 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு வழங்கியது சீனா

(கொழும்பு)

சீனா இலங்கைக்கு 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்கியுள்ளது.

உத்தியோகபூர்வமாக இந்நாட்டுக்கு குறித்த அரிசி தொகையை கையளிக்கும் நிகழ்வு இசுருபாய கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சீனத் தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சீன மக்களின் நட்புறவின் மற்றுமொரு அடையாளமாக, இந்த உணவுத் திட்டத்தின் கீழ் சுமார் பத்து இலட்சம் மாணவர்களுக்கு சீன அரசு அரசி நிவாரணத்தை வழங்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட 7,925 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன் இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளில் 78 வீதத்தை இதில் உள்ளடக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப்பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இல் கடமையாற்றும் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2018 (I) 2022 ஆனது ஏற்கனவே 2022.05.14 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டு நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையின் காரணமாக மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருந்து. எனினும் குறித்த பரீட்சையானது எதிர்வரும் 2022.10.08 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும்.

இதற்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 2022.09.29 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் 021 2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி [illegible] தேசத்தில் கனகராயன்குளம் சந்தி, கனகராயன்குளம் ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புதுவிளாங்குளம் சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 19 ஆம் திகதி இலங்கையில் தேசிய துக்கநாள் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

இலங்கிலாந்தின் மகாராணி எலிசபெத் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக எதிர்வரும் 19 ஆம் திகதியை தேசிய துக்க நாளாக அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொது நிர்வாகம் மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அரச அலுவலகங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் வயல்விழா நிகழ்வு




(நெளுக்குளம்)

வவுனியாவில் தென்னை பயிர்ச்செய்கை சபையினரால் நடத்தப்பட்ட வயல்விழா நிகழ்வு ஓயார் சின்னக்குளத்தில் அமைந்துள்ள றோயல் பண்ணையில் நேற்று முன்தினம் சபையின் பிராந்திய முகாமையாளர் டபிள்யூ. என்.கே.விகல்ல தலைமையில் நடைபெற்றது.

வினைத்திறன் மிக்க தெங்கு உற்பத்தியாளராக மிளிர்வதற்கான பாதை நோக்கிய பயணம் என்னும் தொனிப்பொருளில்" தெங்குச் செய்கை விவசாயிகளுக்கான தெங்குச் செய்கை தொடர்பாக மேலதிக அறிவூட்டல் நிகழ்வு இதன் போது இடம்பெற்றது. (4-299)

Eagle Care Trust (GUARANTEE) LIMITED நம்பிக்கை நிதியத்தினால் தருமபுரம் பிரதேச மருத்துவமனைக்கு குழந்தைகளுக்கான மருந்துப் பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன.



## வடக்கு சுகாதார பணிப்பாளரினால்

# வேரவில் மருத்துவமனைக்கு புதிய நோயாளர் காவுவண்டி

(தருமபுரம்)

கிளிநொச்சி வேரவில் மக்களது முறைப்பாட்டினைத் தொடர்ந்து வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலிப் லியனகே நேரடியாக வேரவில் மருத்துவமனைக்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

வேரவில் மருத்துவமனைக்கு செல்லும் வீதிகளின் மோசமான நிலையினால் அந்த மருத்துவமனைக்கு உரிய நோயாளர் காவு வண்டி கடந்த பல நாட்களாகப் பழுதடைந்தும் இதுவரை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கு மாற்றீடாக அனுப்பப்பட்ட வாகனம் பழுதடைந்த வீதிகள் ஊடாகப் பயணம் செய்ய முடியாத நிலையில் மருத்துவமனையில் தரித்து நின்றது.

இதனால் அவசர நோய் நிலைமைகளில் வேரவில் மருத்துவமனையிலிருந்து பிற மருத்துவமனைகளுக்கு நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

எனவே, இது தொடர்பில் புதிய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பிராந்திய சுகாதாரப் பணி மனையினால் உடனடியாகவே வேரவில் மருத்துவமனைக்கு நோயாளர்கள் காவுவண்டி அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பழுதடைந்த வாகனத்தினை விரைந்து பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அடுத்து நடைபெறும் தாதியர் நியமனத்திற்கு முன்னதாக வேரவில் மருத்துவமனையைத்தரம் உயர்த்தி இங்கும் தாதியர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதிமொழி வழங்கியுள்ளார். (4-316)

## பெயர் மாற்றம்

குட்டியப்புலம் வயாவிளான் எனும் முகவரியில் வசிக்கும் சிவகுரு ஆகிய எனது பெயரை இன்று முதல் சி.மகாலிங்கம் என்று மாற்றம் செய்கிறேன்.

இனி வருங்காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை சனநாயகக் குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
சி.மகாலிங்கம்

(12727)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 280 | 280 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 350 | 180 | 300 | 250 |
| தக்காளி | 180 | 160 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 400 |
| கோவா | 450 | 350 | 450 | 400 |
| கரட் | 350 | 360 | 400 | 400 |
| பூசணி | 130 | 140 | 140 | 150 |
| புடோல் | 120 | 200 | 120 | 100 |
| வாழைக்காய் | 240 | 200 | 180 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 80 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 600 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 180 | 180 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 280 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 170 | 150 | 160 | 180 |
| கறிமிளகாய் | 600 | 700 | 50 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 1100 | 500 | 1400 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 230 | 200 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-90 |
| இராசவள்ளி | 260 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 220 | 350 |
| முள்ளங்கி | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 120 | 150 |

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய
மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 10.09.2022 சனிக்கிழமை தொடக்கம் 16.09.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(அ-4887)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர்மடத்தில்...

இள்ளஞரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருநெல்வேலி பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவேளை கந்தர்மடம் பகுதி அருகே உள்ள மரத்துடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞர் உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## அமெரிக்கா...

தொடர்ந்து பஸில் ராஜபக்ஷவிற்கு வெளிநாடு பயணிக்க தடை விதிக்கப்பட்டு பின் அது நீக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்றுக் காலை அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவுக்கு, 2023 ஜனவரி 15ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்ல உயர்நீதிமன்றம் அண்மையில் அனுமதியளித்திருந்தது.. (ம-7)

## 7 பொருட்களின்...

கையிருப்பில் உள்ளதால் இந்த விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக ஒரு கிலோ கோதுமை மாவை 310 ரூபாயிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## வவுனியாவில்...

ளையார் ஆலயம் ஒன்றில் கடந்த 10 தினங்களாக வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் மாலைத் திருவிழாவின் போது ஆலயத்தில் நின்ற சிலருக்கும், ஆலய பகுதிக்கு வந்த பிறிதொரு குழுவினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக நேற்று ஆலயத்தில் கொடி இறக்குவதற்கான பூசைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்த குழுவினருக்கும், ஆலயத்தில் நின்றவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், வாள்வெட்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இச் சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய நிர்வாகத்தினர் உட்பட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக 20 பேர் வரையில் நெளுக்குளம் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இருந்து பொலிஸாரால் வாள்களும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலய தலைவரை விடுவித்த பின்னரே ஆலயத்தின் கொடி இறக்கப்படும் எனத் தெரிவித்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன் திரண்டனர். குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,299)

## ஆசிய அபிவிரு...

லிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## சுமார் 70 பவுன்...

தங்க நகைகளை பறிகொடுத்தவர் 18 பேர் முறைப்பாடு வழங்கியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பங்கேற்று தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியவர்களிடம் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

தங்க நகைகளை பறிகொடுத்த 18 பேர் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 70 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ம-7)

## ஐ.எம்.எப்...

நேற்று (வெள்ளிக்கிழமை) பாராளு மன்றில் தெரிவித்தார்.

அவரின் கருத்துக்கு பதில் வழங்கும்போதே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், "சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்படிக்கை குறித்து நான் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுடன் கலந்துரையாடியுள்ளேன். அவர் அதனை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு எதிரானவர் அல்ல. அதில் வரி தொடர்பான முக்கிய விடயங்கள் உள்ளதாக அவர் என்னிடம் தெரிவித்தார்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பயங்கரவாத...

ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இலங்கை தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணி கி. சேயோன், இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் கூட்டாக விடுத்த ஊடக அறிக்கையிலேயே போராட்டம் தொடர்பாகவும் அதில் அனைவரையும் பங்கேற்குமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.

மேலும் அந்த ஊடக அறிக்கையிலேயே 1979 ஆம் ஆண்டு, 6 மாதங்களுக்கு ஒரு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக கொண்டுவரப்பட்டு, 40 ஆண்டுகளுக்கும்மேலாக தொடர்ந்தும் அமுலிலுள்ள கொடூரமான பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை (PTA) இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

அன்றைய அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்தியை நசுக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டோம். இது கடந்த காலங்களில் தொடர்ந்ததைப் போலவே இன்றும் தொடர்கின்றது. குறிப்பாக தற்போது காலி முகத்திடல் அகிம்சைவழிபோராட்டக்காரர்களை கைது செய்யவும் இச்சட்டமே பயன்படுத்தப்படுகின்றது.

இன்று காலை 9 மணிக்கு மாவிட்டபுரம், கந்தசாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகும் காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையாக நடைபெறவுள்ள இந்த நாடு தழுவிய ஊர்தி வழிப் போராட்டம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்வதாக அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி வலியுறுத்துவதாகும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயவாக எங்களுடன் சேர்ந்து, இப்பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை இரத்து செய்வதற்கான மனுவில் கையெழுத்திடுங்கள் என்றுள்ளது. (ம-7,33,104)

## காலிமுகத்திடலில்...

நேற்று இரவுவரை முன்னெடுக்கப்பட்டது.

இது வரை கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உட்பட கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறும் வலியுறுத்தி இவ் எதிர்ப்பு ஆர்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், அரசாங்கத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் நிகழ்வும் காலிமுகத்திடல் பகுதியில் இடம்பெற்றது. (ம-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் அனுமதியின்றி சிலர்

# இராஜாங்க அமைச்சு பதவிகளை ஏற்றனர்

## மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் எவ்வித அனுமதியுமின்றி இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளதாக, அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இடைக்கால அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படுமானால் மாத்திரமே, அரசாங்கத்துக்கு ஆதரவளித்து, பதவிகளை ஏற்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்ததாக கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்தத் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டு, அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டதை அனுமதிக்க முடியாது.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றமை குறித்து தாம் வருத்தம் தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

கட்டணம் செலுத்தாததால்

# 3 எரிபொருள் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில்

(கொழும்பு)

மூன்று எரிபொருள் கப்பல்கள் கட்டணம் செலுத்தப்படாத காரணத்தினால்தொடர்ந்தும் கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிட்டுள்ளன.

இலங்கையை வந்தடைந்த 100,000 மெட்ரிக்தொன் மசகு எண்ணெய் கப்பலொன்று கடந்த 23ஆம் திகதி முதல் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிட்டுள்ளது.

76,000 மெட்ரிக் தொன் டீசல் அடங்கிய மேலும் இரண்டு கப்பல்கள் பல நாட்களாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கப்பல்களுக்கான கட்டணத்தை செலுத்துவது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சிடம் வினவியபோது,

உடனடியாக கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## ரணில் அரசு...

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அடக்குமுறை, அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்க அதிகாரிகள் தவறியதையும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அதியுச்ச பலத்தைப் பயன்படுத்துவதையும், போராட்டங்களை கட்டுப்படுத்த இராணுவத்தை அனுப்பியதையும், போராட்டக்காரர்களுக்கு எதிராக பழிவாங்குவதையும் வெளிப்படுத்துவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டு, இந்த உரிமையை பாதுகாக்க அரசுக்கும் கடமை உள்ளது, ஆனால் அதிகாரிகள் மீண்டும் மீண்டும் மக்களின் குரலை நசுக்கியுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா தெரிவித்தார்.

ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர், 140க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், மேலும் 18 பேருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினர்களும் போராட்டக்காரர்களை "பயங்கரவாதிகள்" என்று பல முறை வர்ணித்துள்ளனர். மூன்று போராட்டக்காரர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தை மீறுவதாக உள்ளது, அதை இரத்துச் செய்ய வேண்டும்.

அமைதியான முறையில் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டங்களில் பங்கேற்ற போராட்டக்காரர்களுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிடுமாறு அரசாங்கத்தை கோருவதாகவும் அத்துடன் இவ்வாறான குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

உலக சந்தையில்

# மசகு எண்ணெயின் விலை சடுதியாக வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, பிரேண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 8928 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.52 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது.

அந்த பீப்பாய் ஒன்றின் விலை 81.94 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

077 745 1625

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 சதயம், 'சகல வசதிகளுமுடைய Account Assistant மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (12716)

077 367 1062

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)

!!!அவசியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

## வேலையாள் தேவை

ஈர அரிசி அரைத்து வறுத்தல் ஆண், பெண் இருபாலாரும் சம்பளம் : 1,700/= மேல் நெல்லியடி

(C-4891)

077 936 1356

## ஆங்கில வகுப்பு

ஆண்டு 2 தொடக்கம் G.C.E (O/L), G.C.E (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

076 119 9298

M.Rajan (12664)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
2. சிற்றுண்டிகள் தயாரிப்பவர் ஆண்/பெண்
3. பழயூஸ் தயாரிப்பவர் ஆண்/ பெண்
4. துப்பரவு பணியாளர் ஆண்/பெண்

பகுதி நேரம்/ முழு நேரம் (12721)

076 166 1986

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தருக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு (12672)

077 728 6050

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கறுப்பு நிற பையினுள் சான்றிதழ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(12725)

077 717 2715

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4881)





Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS (C-4881)

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12710)

077 658 5999, 076 436 5814, 077 874 8135

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12-10)

தொடர்புகளுக்கு:- 076 755 8606, 077 911 6983


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.